**Copy of Deposition**

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண் :02/2018**
**வாதிதரப்பு சாட்சி:1**

பெயர்:சந்திரசேகரன் (வா.சா.1 ) நாள்: 24.04.2024

த.பெ:

**2024 ம்** ஆண்டு **ஏப்ரல் மாதம் 24 ம் நாள் புதன்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ம.பெரியசாமி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா:-1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பு):-**

இந்த தாவா கொந்தளம் கிராமம், க.ச.எண்.387/2 காலையில் உள்ள பூமியை பொறுத்து எனது அனுபவ சுவாதீனத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். க.ச.எண்.387/2 காலையில் உள்ள பூமியில் பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறமாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனது சுவாதீனத்தில் உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நான் எவ்வளவு விஸ்தீர சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. ஒன்றாம் பிரதிவாதி தாவா சொத்தில் எவ்வளவு நீள, அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்தார் என்று குறிப்பிட்டு கூறி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தின் அத்தை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு 2019 ம் வருடத்தில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை

பார்வையிட்டார். தாவா சொத்தின் தென்புற அத்தை நிர்ணயம் செய்யாமல் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதி தாவா சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர், வட்டசார் அளவையருடன் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் விவரங்களை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் படித்து பார்த்தேன் ஆனால் எனக்கு புரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா சொத்தின் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து என்பது தாவாவில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விஸ்தீரணம், குறிப்பிட்டுள்ள நான்குபுற எல்லைகள் மற்றும் குறிப்பிட்டுள்ள காலை எண்ணில் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல, தாவா சொத்து விவரம் சரியாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எனது சுவாதீணத்தை நிரூபணம் செய்யாத காரணத்தினால் தாவா தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(Sd xxx V. Loganathan)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**Copy of Deposition**